# புதிய சங்கங்கள் அமைப்பதற்கான வழிகாட்டி

## _முன்னேற்பாடு:_

தமிழ்ப் பள்ளிகளில் புதிய முன்னாள் மாணவர் சங்கத்தை அமைக்க ஆர்வம் கொண்டவர்கள் கீழ்க்கண்ட அம்சங்களை வழிகாட்டியாகக் கொள்ளலாம்:-

- குறிப்பிட்ட பள்ளியில் படித்த 18 வயதுக்கு மேற்பட்ட முன்னாள் மாணவர்களை அடையாளம் காணுங்கள்,
- இவர்களுள் **7 - 10** பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்து ஏற்பாட்டுப் பணிகளைப் பகிர்ந்தளியுங்கள்,
- பள்ளியின் தலைமையாசிரியரின் ஆதரவைப் பெற்று ஆலோசனையையும் கேளுங்கள்,
- அமைப்புக் கூட்டத்தை நடத்துவதற்கான நாள், நேரம், இடம் ஆகியவற்றை உறுதி செய்யுங்கள்,
- அமைப்புக் கூட்டத்தின் விவரங்களைச் சுற்றறிக்கையாகத் தயாரித்து இன்னாள் மாணவர்கள் மூலம் விநியோகம் செய்யுங்கள்,
- அமைப்புக் கூட்டத்தின் விவரங்கள் அடங்கிய செய்தியை தமிழ் பத்திரிகைகள் மற்றும் வானொலி நிலையங்களுக்கு அனுப்பி வையுங்கள்,
- ஏற்பாட்டுக் குழு உறுப்பினர்கள் தங்களுக்குத் தெரிந்த முன்னாள் மானவர்-களுடன் தொடர்பு கொண்டு கூட்டத்திற்கு வரச் சொல்லுங்கள்,
- கூட்டத்திற்குக் குறைந்தது 30 பேர் வருவதை உறுதி செய்யுங்கள். அதிகமானோர் வந்தால் சிறப்பாக இருக்கும்.

**அமைப்புக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்**

- வரவேற்புரை
- தலைமையுரை
- சட்ட திட்ட விளக்கம்
- தீர்மானம் நிறைவேற்றல்,
- சங்கத்தின் பெயரை உறுதி செய்தல்,
- அமைப்புக் குழு தேர்வு ( **7-12** பேர்)
- பொது

**சங்கத்தின் பதிவு:**

அமைப்புக் கூட்டம் நடந்த 60 நாட்களுக்குள் பதிவு விண்ணப்பத்தை சங்கங்களின் பதிவதிகாரிக்கு அனுப்பி வைக்கவேண்டும். பதிவு விவரங்களையும் விண்ணப்பத்தையும் www. eroses. gov. my பெற்றுக்-கொள்ளலாம்.

**பதிவுக்குப் பின்னர்**

சங்கதின் பதிவுச் சான்றிதழ் கிடைக்கும் வரையில் நிதி வசூல் அல்லது நிகழ்ச்சிகளை நடத்த முடியாது. பதிவுச் சானறிதழ் கிடைத்த பின்னர் முதலாவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தைக் கூட்டி சங்கத்தை வழி நடத்திச் செல்லலாம்.

---

மேல் விவரங்களுக்கு:

https://pertamatamil.org.my

மின்னஞ்சல் முகவரி:-
admin@pertamatamil.org.my